**சிலவ் பிலான்டேசன்ஸ் லிமிடட் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிலவ் பிலான்டேசன்ஸ் லிமிடட்டின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது். எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்நியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவின் உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கம்பனி செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் நிர்யிக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுதல், உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினை பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் சொத்துக்கள் காணப்படுமாயின் அது சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையினை நிறுவனத்தினால் பேணுவது அத்தியவசியமானதாகும்.

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் சம்பந்தமான இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 மற்றும் 61 ஆம் பந்திகளின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களின் வினைத்திறனான ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியளவில் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்து முடிவுறுத்தியுள்ள ரூபா 24,666,125 கிரயமான அலுவலக உபகரணங்கள், ரூபா 16,326,565 தொகையான மனைப் பொருட்கள் மற்றும் ரூபா 1,631,448 தொகையான நீர் வழங்கல் பொறிகள் ஆகிய சொத்துக்கள் கம்பனியினால் இன்னும் பயன்படுத்தப்பட்டிருந்தும் அந்த மதிப்பீட்டுத் தவறினை இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்து சரியான இயலளவுப் பெறுமதியை | கிரயத்தின் அடிப்படையில் இலகுவழி முறைமையை பயன்படுத்தி விபரமான வருமானக் கூற்றில் பெறுமானத் தேய்வு செய்தல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1992 இற்கு முன்னர் கொள்வனவு செய்த அலுவலக உபகரணங்கள், மனைப் பொருட்களும் துணைக்கருவிகளும், இயந்திரங்கள் போன்ற சொத்துக்கள் கம்பனி தோற்றுவிக்கப்படும் போது மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தேறிய புத்தக பெறுமதியானது கம்பனியின் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தும் இப்பெறுமதிகள் தனித்தனியாக | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்த சொத்துக்களின் விளைதிறனான ஆயுட் காலத்திற்கு இணங்க இயலளவுப் பெறுமதியை திருத்தம் செய்து சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை. | இனங்காணப்பட்டிருக்காததுடன் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட கணனி உபகரணங்கள் மற்றும் மனைப் பொருட்கள் முதலிய சொத்துக்கள் கம்பனியால் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இச்சொத்துக்களை மதிப்பீடு செய்தல் செலவு கூடிய ஒரு செயற்பாடாக இருந்த போதிலும் அதனை ஆராய்ந்து பார்ப்பதற்காக முகாமைத்துவத்தினால் தேவையான கவனம் செலுத்தப்பட்டு இந்நடவடிக்கையை மேற்கொள்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்கீட்டு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) கம்பனியால் 85 தோட்டப் பிரிவுகளில் 18 தோட்டப் பிரிவுகளின் அளவீட்டு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அந்த 18 தோட்ட பிரிவுகளின் ஹெக்டேயர் அளவு மற்றும் அவை தொடர்பான குத்தகை உட்டன்படிக்கைகளுக்கு இணங்க ஹெக்டயர் அளவுகளுக்கிடையே 378.9432 ஹெக்டயர் வித்தியாசம் உள்ளது என அவதானிக்கப்பட்டது. எனவே நிதி நிலைமைக்கூற்றில் உள்ள காணிகளின் பெறுமதி ரூபா 8,521,385 ஆல் மிகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | கம்பனியின் 85 தோட்ட பிரிவுகளில் 18 தோட்ட பிரிவுகளின் திட்ட படம் வரைதல் முடிவடைந்துள்ளதுடன் அதன் போது நில அளவை செய்யப்பட்ட காணிகளின் அளவுக்கும் குத்தகை உடன்படிக்கையிலுள்ள காணிகளின் அளவுக்குமிடையே 378.9432 ஹெக்டயர் வித்தியாசம் காணப்பட்டது. அனைத்து தோட்ட பிரிவுகளையும் அளவீடு செய்யும் நடவடிக்கை முடிவடைந்ததன் பின்னர் இனங்காணப்பட்ட அனைத்து முரண்களும் முறைப்படியாக செம்மையாக்கப்பட்டுள்ளது. | காணிகளின் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் சரியாக காணிகளின் பெறுமதியை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் காணிகள் தொடர்பான ஹெக்டயர் அளவு மற்றும் ஒவ்வொரு தோட்டங்களின் நிதிக் கூற்றுக்களுக்கு இணங்க இனங்காணப்பட்டுள்ள ஹெக்டயர் அளவுகளுக்கிடையே 603.8 ஹெக்டயர் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | ஜனவசம காணிகளை ஒப்படைக்கும் போது காணிகளுக்காக திட்டங்கள் வழங்கப்படாததுடன் அக்காணிகளை அளவீடு செய்யும் போது பாரிய அளவில் முரண்கள் காணப்படும் சாத்தியம் உள்ளதுடன் தற்பொழுது காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருவதனால் அளவீடு செய்யும் நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் இனங்காணப்பட்ட அனைத்து முரண்களும் முறையாக செம்மையாக்கப்பட்டுள்ளது. | காணிகளின் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் சரியான அளவினை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை (ரூபா) | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 104.55 மில்லியன் | 67 தோட்ட பிரிவுகள் தொடர்பான உறுதிகள் மற்றும் திட்டங்கள் | 85 தோட்ட பிரிவுகளில் 18 பிரிவுகள் பொருந்தோட்ட அமைச்சினூடாக நில அளவையாளர் திணைக்களத்தினால் நில அளவை நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டுள்ளது. மிகுதியான 67 தோட்ட பிரிவுகளுக்காக திட்டங்கள் இல்லாதிருந்த போதிலும் எல்லைகள் மற்றும் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக செல்லுபடியான குத்தகை உடன்படிக்கை உள்ளது. இக்காணிகளின் சிறப்பு உரிமையை ஜனவசமவிடம் உள்ளதுடன் கம்பனிக்கு குத்தகை உரிமை உள்ளது. | காணிகளுக்குரிய உறுதிகள் மற்றும் திட்ட வரைபடங்களை தயாரித்தல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பலுகஸ்வெவ தோட்டத்தின் ரூபா 1,114,325 தொகையான கடன்பட்டோர் மீதி ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதனுள் ரூபா 799,320 தொகை விற்பனை பிரிவின் பௌதீக இருப்பு பரீட்சிப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட பொருள் காணாமல் போனமை சம்பந்தமானவை எனவும் அது மொத்த கடன்பட்டோரில் 53.8 சதவீதமாக இருந்த போதிலும் அந்த காணாமல் போன இருப்புக்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பௌதீக இருப்பு பரீட்சிப்பில் உறுதிப்படுத்தப்பட்ட பொருள் காணாமல் போனமை சம்பந்தமாக இரண்டு ஊழியர்கள் தொடர்பாக முறையாக பரீசிக்கப்பட்டுள்ளது. அதன் போது அப்பணத்தை அந்த இரண்டு ஊழியர்களிடமிருந்தும் அறவீடு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறும் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட மிகுதி கடன்பட்டோர் | கடன்பட்டோர் மீதிகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் அறவீடு செய்வதற்கும் காணாமல் போன இருப்புக்களுக்காக பொறுப்புக்கூற வேண்டிய நபர்களிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அதன் மேற்பார்வையாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலிவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2015 மே 25 ஆந் திகதிய PED 01/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | 1. உத்தியோகபூர்வ வாகனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகமையைப் பெற்றிருக்காத MM l-l ஆம் தரத்திலுள்ள 03 பதவிகள் மற்றும் JM ட-ட தரத்திலுள்ள 06 பதவிகளுக்காக போக்குவரத்துப் படிகளாக 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 468,000 தொகையும் ஒரு உத்தியோகபூர்வ வாகனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகமையற்ற MM ட-ட தரத்திலுள்ள பதவியில் இருக்கின்ற ஒரு உத்தியோகத்தருக்கு மாதாந்தம் எரிபொருள் 120 லீற்றர் வீதம் எரிபொருள் படியாக மீளாய்வாண்டின் போது ரூபா 662,400 தொகையும் செலுத்தபபட்டிருந்தது. | எரிபொருளினைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக திறைசேரி பிரதிநிதியை உள்ளடக்கி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு இணங்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் அமைப்பு அகவிதியில் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது. | எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் படிகளானது சுற்றறிக்கையின் பிரகாரம் தகமை பெறுகின்ற உத்தியோகத்தர் களுக்கு மாத்திரம் வழங்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 493,469,876 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 631,978,959 ஆகும். அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 138,509,083 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இதற்காக தென்னை நாற்றுக்கள் விற்பனை வருமானம் மற்றும் முந்திரிகை விற்பனை வருமானம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 39,550,906 மற்றும் ரூபா 122,322,772 ஆல் குறைவடைதல் மற்றும் நிருவாக மற்றும் ஏனைய செலவுகள் ரூபா 22,086,947 ஆல் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| விடயம் | 2022 | 2021 | வித்தியாசம் | வித்தியாசத்தின் சதவீதம் அதிகரிப்பு/ (குறைவு) % |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | |
| **வருமானம்** | | | | |
| தேங்காய் விற்பனை வருமானம் | 882,287,388 | 801,718,449 | 80,568,939 | 10.05 |
| முந்திரிகை விற்பனை வருமானம் | 16,086,501 | 55,637,407 | (39,550,906) | (71) |
| தென்னை நாற்றுக்கள் விற்பனை வருமானம் | 19,923,682 | 142,246,454 | (122,322,772) | (86) |
| ஏனைய வருமானம் | 181,535,982 | 160,985,376 | 20,550,606 | 13 |
| நிதி வருமானம் | 135,874,424 | 25,611,433 | 110,262,991 | 431 |
| **செலவுகள்** | | | | |
| விற்பனைக் கிரயம் | 520,940,365 | 520,797,587 | 142,778 | 0.03 |
| நிருவாகச் செலவுகள் | 229,027,818 | 206,940,871 | 22,086,948 | 11 |
| நிதிச் செலவுகள் | 43,693,022 | 40,413,552 | 3,279,470.22 | 8 |
| வருமான வரிச் செலவுகள் | (20,411,125) | 121,091,847 | | |

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

- மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்துக்கள் விகிதம் முறையே 4:1 மற்றும் 3:1 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டின் போது அந்த விகிதம் 3:1 ஆக இருந்தன. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் குறுங்கால நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் முறையே ரூபா 721,479,696 மற்றும் ரூபா 985,660,947 தொகைகள் நிறுத்திவைக்கப்பட்டதன் காரணமாக நடைமுறை மற்றும் விரைவுச் சொத்துக்களின் விகிதம் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தன என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

- மீளாய்வாண்டில் மொத்த இலாப விகிதம் 46 சதவீதமாக இருந்ததுடன் கடந்த ஆண்டின் போது அந்த விகிதமான 50 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த தேறிய இலாப விகிதம் 04 சதவீத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

- மீளாய்வாண்டின் போது தேறிய இலாப விகிதம் 53 சதவீதமாக இருந்ததுடன் கடந்த ஆண்டின் போது அந்த விகிதமான 49 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் தேறிய இலாப விகிதம் 04 சதவீத்தால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஏனைய நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதற்கு கம்பனிக்கு சட்டரீதியான உரிமை இல்லாதிருந்த போதிலும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, எல்கடுவ பெருந்தோட்ட கம்பனி, இலங்கை அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், அரசாங்க வளங்கள் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு, மற்றும் இறப்பர் உற்பத்தி ஏற்றுமதி கூட்டுத்தாபனத்திற்கு கம்பனியினால் மொத்தமாக ரூபா 105 மில்லியன் கடன் பணம் 2010 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. கமபனியின் பணிப்பாளர்கள் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டின் போது உரிய கம்பனிகளிடமிருந்து வட்டியையும் உள்ளடக்கி அறவீடு செய்ய வேண்டியிருந்த ரூபா 119.758 மில்லினுக்காக நிதிக்கூற்றுக்களில் முழுமையான ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் இறுதி வரை வட்டியையும் உள்ளடக்கி அறவீடு செய்வதற்கு முடியாதிருந்த முழுமையான கடன் பணம் ரூபா 183.758 மில்லியனாக இருந்ததுடன் அப்பெறுமதியை நிதிநிலைமைக் கூற்றில் காட்டுவதற்குப் பதிலாக குறிப்புக்களின் மூலம் மாத்திரம் வெளிப்படுத்ததப்பட்டிருந்தது. | சிலாபம் பெருந்தோட்ட கம்பனியால் 2010 ஆம் ஆண்டின் போது அரசாங்க வளங்கள் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சில் அப்போது இருந்த செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் மற்றும் பொதுத்திறைசேரியின் இணக்கப்பாட்டின் அடிப்படையிலும் இந்த அரசாங்க நிறுவனங்களுக்கு அவர்களின் அத்தியவசியமான நிதி நடவடிக்கைகளுக்காக நிதிவசதிகள்/ கடன்களாக நிதிகள் வழங்கப்பட்டிருந்தன. உரிய கடன் பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக கடன் வழங்கிய ஆண்டில் இருந்து பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினம் கம்பனியின் பணிப்பாளர்கள் சபையின் தீர்மானத்திற்கு இணங்க 2014 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களின் மூலம் இதற்காக முழுமையான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | கம்பனியால் தனது அதிகாரம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக புரிந்துணர்வோடு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் வழங்கப்பட்டுள்ள கடன் மற்றும் வட்டியை முறையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்கீட்டு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கம்பனியின் மதிப்பீடு செய்யப்பட்ட முந்திரிகை விளைச்சல் 169,800 கிலோகிராம்களாக இருந்ததுடன் உள்ளபடியான முந்திரிகை விளைச்சல் 63,532 கிலோகிராம்களாக இருந்ததுடன் அதனை மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 63 சதவீத்தால் குறைவானதாகும். 2021 ஆம் ஆண்டின் போது உள்ளபடியான விளைச்சல் 91,015 கிலோகிராம்களாக இருந்ததனால் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான முந்திரிகை விளைச்சல் 27,483 கிலோ கிராம்களினால் அதாவது 30 சதவீத்தினால் ஒரு | விளைச்சலினை தீர்மானிப்பதானது காணப்படுகின்ற காலநிலையினை அடிப்படையாகக் கொண்டதாகும். கம்பனியின் முந்திரிகை பயிர்ச்செய்கையானது அதிக அளவில் காணப்படுவது புத்தளம் மாவட்டத்தில் ஆக இருந்ததுடன் அந்த மாவட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் தொடக்க 03 மாத காலத்தில் அதிக மழைவீழ்ச்சி கிடைத்திருந்தது. அது விளைச்சல் குறைவடைந்தமைக்கு பிரதான காரணமாக இருந்தது. | பயிர்ச்செய்கையை முறைப்படியாக பராமரிப்பதற்கும் திட்டமிட்டு அதிக முந்திரிகை விசைச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைவு அவதானிக்கப்பட்டது. அதன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 19,321,648 அளவிலானதாக இருந்தது. | | |
| (ஆ) | ஒட்டுமொத்தமாக கருத்தில்கொள்ளும் போது கம்பனியின் 2022 ஆம் ஆண்டிற்கான மொத்த தேங்காய் வீளைச்சலில் 31.6 சதவீதமானவை விழுந்த தேங்காய்களாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ்வாறு தேங்காய் விளைச்சலில் குறிப்பிடத்தக்க அளவானவை விழுந்த தேங்காய்களாகப் பெற்றுக்கொள்வதன் மூலம் தேங்காய் விளைச்சல் காணாமல் போகின்ற மற்றும் அழிவடைக்கின்ற ஆபத்து காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | விழுந்த தேங்காய்களின் அளவு அதிகரிப்பதற்கான காரணத்திற்கான அடிப்படையாக நிறுவனத்தில் காணப்பட்ட உயரமான மரங்களின் அளவு காரணமாக இருந்தது. இந்த உயரமான மரங்களின் தேங்காய் விளைச்சலினை அறுவடை செய்வதற்காக கொக்கைகள் பயன்படுத்தப்படாததுடன் மரங்களில் ஏறுவதன் மூலம் விளைச்சல் அறுவடை செய்யப்படுகின்றன. உயரமான மரங்களில் தேங்காய் விளைச்சலினை அறுவடை செய்யும் போது அதிக செலவினை மேற்கொள்ளவேண்டியிருந்ததுடன் அதன் மூலம் 1000 தேங்காய்களின் உற்பத்திச் செலவு உயரந்த மட்டத்தினை அடைந்திருக்கலாம். | தேங்காய் விளைச்சலினை முறையாக உரிய காலத்தில் பெற்றுக்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட தேங்காய்களைப் பறிப்பதற்காக தோட்டங்களினால் தயாரிக்கப்படுகின்ற கால அட்டவணையை முறைப்படியாக அமுல்ப்படுத்துதல் மற்றும் கிரயத்தை குறைக்கும் வகையில் புதிய தொழில்நுட்ப முறைமைகள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டில் கம்பனியின் தென்னை மரங்களின் வயதுப் பகுப்பாய்வினைப் பரீட்சித்த போது 20 வயதிற்கு மேற்பட்ட தென்னை மரங்களின் அளவு 295,750 ஆக உள்ளது எனவும் அது கம்பனியின் மொத்த தென்னை மரங்களில் 72 சதவீத அளவானவை எனவும் அவதானிக்கப்பட்டது. . அவ்வாறே ஒட்டுமொத்த முந்திரிகை பயிர்ச்செய்கையில் 90 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவானவை 20 ஆண்டுகளுக்கு மேற்பட்டது அதாவது 1992 ஆம் ஆண்டிலிருந்து 2003 ஆம் ஆண்டுவரை பயிரிடப்பட்ட மரங்கள் என அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2022 ஆம் ஆண்டிற்கான தரவுகளைப் பரீட்சித்த போது ஒரு முந்திரிகை மரத்தின் வருடாந்த விளைச்சல் 1.21 கிலோகிராம் (63,532/49,707) என்ற குறைந்த அளவுடையதாகும். அதற்கிணங்க கம்பனியின் முகாமைத்துவத்தினால் புதிய முந்திரிகை பயிர்ச்செய்கை செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துதல், காணப்படுகின்ற பயிர்ச்செய்கையை முறைப்படியாக பராமரித்து அதிக முந்திரிகை விளைச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவு | தற்பொழுது தனிப்பட்ட தோட்டக்காரர்களுக்கு விளைச்சலினை வழங்குவதற்காக முந்திரிகை மரங்களினை குத்தகைக்கு வழங்கும் நடைமுறையினை அமுல்ப்படுத்துவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இதன் மூலம் நிறுவனத்தின் செலவுகளைக் குறைத்தல் மற்றும் அண்மித்த மேற்பார்வையின் மூலம் உற்பத்தி இயலளவினை அதிகரிக்கச் செய்து நிறுவனத்தினால் அதிக இலாபத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது.<br><br>ஒரு ஹெக்டயரிலுள்ள முந்திரிகை மரங்களின் அளவினை உரிய நியமங்களின் படி பேணுவதற்காக உரிய வெற்றிடங்கள் தற்பொழுது பூரணப்படுதப்பட்டு வருகின்றது. மேலும், தற்பொழுது காணப்படுகின்ற முந்திரிகை பயிர்ச்செய்கை செயற்திட்டங்களை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கும் உரிய கமத்தொழில் நடவடிக்கைகளை | உச்சஅளவு விளைச்சலினைப் பெற்றுக்கொள்ளகூடிய வகையில் பயிர்ச்செய்கையை முகாமைத்துவம் செய்தல் கம்பனியின் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| | கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | மேற்கொள்வதற்கும் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. | |
| (ஈ) | இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில் நுட்ப ஆலோசனை பத்திரம் 2020 இற்கு இணங்க ஒரு தென்னை மரத்தின் சராசரி வருடாந்த தேங்காய் விளைச்சல் 60 தேங்காய்களுக்கும் 100 தேங்காய்களுக்கும் இடைப்பட்டதானதுடன் அதனை 60 தேங்காய்களாகக் கருதுவதாயின் 2022 ஆம் ஆண்டில் விளைச்சல் தருகின்ற 396,098 மரங்களுக்கான வருடாந்த மொத்த விளைச்சல் 23,765,880 தேங்காய்களாக இருக்க வேண்டிய போதிலும் 2022 ஆம் அண்டின் போது கம்பனியின் ஒட:டுமொத்த உற்பத்தியானது 15,172,334 தேங்காய்களாக இருந்தது. அதற்கிணங்க ஒரு தென்னை மரத்தின் சராசரி வருடாந்த விளைச்சல் 38 தேங்காய்கள் வரை குறைவடைந்திருந்தது என அவதானிக்கப்பட்டது. | தென்னை மரத்தின் விளைச்சலினை தீர்மானிக்கின்ற பிரதான அம்சமாக வெப்பமும் மழைவீழ்ச்சியும் காணப்படுகின்ற போதிலும் தென்னம் பூவில் உருவாகின்ற பெண் பூக்களின் எண்ணிக்கை, தென்னம் பூக்கள் திறப்பதற்கு முன்னைய 02 மாதங்களின் காலநிலை நிலைமை, தென்னம் பூக்கள் திறந்ததன் பின்னர் தொடக்க 03 மாதங்கள் தொடர்பாக ஏற்படுகின்ற வறட்சி மற்றும் வெப்பத்தின் தாக்கம் அதேபோல மரத்தின் ஏனைய குலைகளிலுள்ள தேங்காய்களின் அளவு மற்றும் மண்ணின் பொருத்த தன்மை கமத்தொழில் ரீதியான பராமரிப்பு ஆகிய விடயங்கள் தென்னை விளைச்சலின் முரண்களுக்கான காரணமாக உள்ளன. அதற்கிணங்க 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் விளைச்சலில் முரண்பாடுகள் காணப்பட்டன. | சராசரி தேங்காய் விளைச்சல் வழமைக்கு மாற்றமாக குறைவடைவதற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து அது சம்பந்தமாக தேவையான முயற்சிகள் எடுப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | கம்பனியிடம் உள்ள பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத 186.15 ஹெக்டயர்கள்' பல்வேறு நபர்களினால பலவந்தமாக கிராமங்களை விரிவுபடுத்துவதற்கு மற்றும் அத்துமீறிய குடியிருபுக்களாக பிடித்துவைக்கப்பட்டிருந்தன. அதன் மூலம் 89.16 ஹெக்டயர் அளவான காணியை மாத்திரம் மீளப்பெற்றுக்கொள்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் மிகுதியான 96.99 ஹெக்டயர் அளவான காணி படித்துவைக்கப்பட்டிருந்தமை சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | இதுவரை சட்ட நடவடிக்கை எடுக்கப்படாத மிகுதியான 96.99 ஹெக்டயர் அளவான காணியானது ஏங்களால் இக்காணியை பெற்றுப்பேற்பதற்கு முன்பிலிருந்து இடம்பெற்றுள்ள சம்பவமாகும். | குத்தகை உரிமையின் கீழ் உள்ள அதிகாரமின்றி பிடித்துவைத்துள்ள காணிகளை தீர்த்துவைப்பதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் கம்பனியின் பொறுப்பாகும். |
| (ஊ) | சிலாபம் பெருந்தோட்ட கம்பனிக்குச் சொந்தமான ஹீம்மெலியாகார தோட்டத்தில் சுரங்கம் தோண்டுதல் மற்றும் மறுசீரமைப்புச் செய்யும் செயற்பாடு 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஒப்பந்தக்காரினால் | ஹீம்மெலியாகார சுரங்கங்களை மறுசீரமைப்பதற்காக ஏற்படுத்திக்கொண்ட இருதரப்பு உடன்படிக்கை 2022/12/31 ஆந் திகதியில் செல்லுபடியற்றதாக காணப்பட்டதுடன் அது | வேலை பூர்த்திசெய்யப்பட்டிருக்காத ஒப்பந்தங்கள் சம்பந்தமான உடன்படிக்கையின் பிரகாரம் மேலதிக |

| | | | |
|---|---|---|---|
| | நிறுத்தப்பட்டிருந்தது. இதனால் உடன்டபடிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்தது. ஒப்பந்தகாரர்களினால் உடன்படிக்கையை மீறுதல் சம்பந்தமாக கம்பனியால் மீாய்வாண்டில் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உரிய செயற்பாட்டை பூர்த்திசெய்வதற்கும் எதுவித முயற்சியும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தமாக 2023 ஆம் ஆண்டின் போது தேவையான சட்டரீதியான முயற்சிகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | எக்லிசியா மற்றும் மடுகஸ்ஆகார தோட்டங்களில் சுரங்கங்களை மறுசீரமைப்புச் செய்யும் செயற்திட்டம் 2021 செப்தெம்பர் 22 ஆந் திகதி முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒப்பந்தக்காலம், 03 தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை அச்செயற்பாடு முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | மடுகஸ்கார சுரங்கத்தை மறுசீரமைப்புச் செய்தல் 2022/12/31 ஆந் திகதி இருதரப்பு உடன்படிக்கை அமுல்ப்படுத்தப்பட்டது. குளத்தினை மறுசீரமைப்புச் செய்யும் நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டின் போதும் இடம்பெற்று வந்திருந்தது. அவ்வாறே எக்லீசியா சுரங்கத்தை மறுசீரமைப்புச் செய்தல் 2022/12/31 ஆந் தகிதி உடன்படிக்கை அமுல்ப்படுத்தப்பட்டது. இருதரப்பு உடன்படிக்கை சம்பந்தமான தீர்மானத்தை எதிர்காலத்தில் எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | சுரங்கங்களை மறுசீரமைப்புச் செய்யும் செயற்திட்டம் சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் மேற்கொள்வதற்காக மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் உடன்படிக்கை நிபந்தனைகளை மீறுவதற்கு உரிய உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | சிலாபம் பெருந்தோட்ட கம்பனியின் கினியம தோட்டத்தின் முதிர்ச்சியடைந்த தென்னைப் பயிர்ச் செய்கையினை உள்ளடக்கிய 58 ஹெக்டயர் காணியில் கீழ் பயிர்ச்செய்கையாக 2012 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட கப்ருவன விதைத் தென்னை செயற்திட்டத்தினை பராமரிப்பதற்கு 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 6,413,006 செலவு செய்யப்பட்டிருந்தும் கப்ருவன விதைத் தேங்காய்களை விற்பனை செய்வதன் மூலம் எந்த வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கப்ருவ விதைத் தேங்காய் செயற்திட்டம் தொடர்பாக நடுகை செய்யப்பட்ட குந்திரா மற்றும் சென்ராமன் ஆகிய இனங்களை விற்பனை செய்தல் மூலம் மாத்திரம் 2022 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிக வருமானம் ரூபா 2,276,850 ஆகும். அந்த மேலதிக வருமானத்தை | இயற்கையான மகரந்த சேர்க்கை நடவடிக்கை இடம்பெறும் வரை விதைத் தேங்காய் தோட்டம் உள்ளடங்கலாக தெரிவுசெய்யப்பட்ட 250 குந்திரா மரங்கள் கைகளாலான மகரந்த சேர்க்கையின் மூலம் விதைத்தேங்காய் உற்பத்தி நடவடிக்கை 2019 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட போதிலும் செவ்வண்டுகளின் பாதிப்புக்கள் அதிகரித்துச் செல்லல் மற்றும் குந்திரா மரங்கள் பலவீனமடைதல் ஆகிய விடயங்களின் அடிப்படையில் அந்த கைகளால் மகரந்த சேர்க்கை செய்யும் நடவடிக்கை 2020 ஆம் ஆண்டின் போது தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனையின் பிரகாரம் நிறுத்திவைக்கப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட கைகளால் மகரந்த சேர்க்கை செய்யும் நடவடிக்கையின் மூலம் | கப்ருவன விதைத்தேங்காய் செயற்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கிரயத்துடன் செம்மையாக்கியதன் பின்னர் இன்னும் ரூபா 4,136,156 கிரயத்தினை உள்ளடக்க வேண்டியுள்ளது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | "கப்ருவன" இனத்தைச் சார்ந்த 100 தென்னை நாற்றுக்கள் 2020 ஆம் ஆண்டின் போது உற்பத்தி செய்யப்பட்டதுடன் அந்த தென்னை நாற்றுக்கள் கினியம தோட்டத்தை உள்ளடக்கி 2021 ஆம் ஆண்டின் போது நடுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கிணங்க 2020 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் விதைத் தேங்காய் உற்பத்தி மேற்கொள்ளப்படவில்லை. | |

## 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| முந்திரிகை பயிர்ச்செய்கைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள முந்திரிகை பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான எனினும் பயிர்ச்செய்கை பண்ணப்படாத 92.2 ஹெக்டயர் காணி 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயிர்ச் செய்கை நடவடிக்கைக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | இதுவரை இனங்காணப்படாதவை 92.2 ஹெக்டயர்களாக முந்திரிகை பயிர்ச் செய்கையில் குறிப்பிடப்பட்ட அளவானது 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது முறையாக இனங்காணப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளது. | முந்திரிகை மற்றும் ஏனைய பயிர்ச்செய்கைகளுக்காக பயன்படுத்தப்படாத காணிகளை இனங்கண்டு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2012 மே 04 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஜீ3/53/5 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் 32 பதவிகள் தொடர்பாக 116 உத்தியோகத்தர்களை கம்பனியின் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் அங்கீகரித்த 10 பதவிகள் தொடர்பாக 18 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. அத்தியாவசியமற்ற பதவிகளைக் குறைத்தலின் மூலம் அங்கீகரித்த ஆளணியினரை பொருத்தமானவாறு திருத்தம் செய்வதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிலாபம் பெருந்தோட்ட கம்பனியில் எதிர்காலத்தில் அமுல்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற புதிய செயற்திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் அமுல்ப்படுத்தப்படும் திட்டங்களுக்கு வாய்ப்பளித்து மனித வளங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதுடன் நடைமுறையில் மிகவும் குறைந்த ஊழியர் எண்ணிக்கையின் மூலம் உச்ச அளவு வினைத்திறனை பெற்றுக்கொள்வதனை காரணமாகக் கொண்டு புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை. | கம்பனியின் கடமைகளுக்குப் பொருந்தும் வகையில் அங்கீகரித்த ஊழியர்களின் எண்ணிக்கையை திருத்தம் செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட இயற்கை வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தும் ரூபா 98.04 மில்லியன் பெறுமதியான 05 செயற்திட்டங்களும் ரூபா 56.12 மில்லியன் தொகையான பெறுமதி சேர்க்கும் 03 செயற்திட்டங்களும் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட சிறப்பற்ற பொருளாதார சூழ்நிலை, எரிபொருட்களின் விலை அதிகரித்தலோடு உருவாகிய போக்குவரத்துப் பிரச்சினை, நாட்டிற்கு வெளிநாட்டவர்கள் வருகை தராமை, நாட்டில் பாடசாலைகள் மூடப்படுதல் முதலிய விடயங்களின் காரணமாக இச்செயற்திட்டங்களை அமுல்ப்படுத்த முடியாதிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டின் சாத்தியத்துடன் செயற்திட்டங்களை உள்ளடக்கி அவற்றினை வினைத்திறனாக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |